# இறைத்தூதன்
## கத்தோலிக்க வார இதழ்

பின்பு இயேசு தம் சீடரைப் பார்த்து, “என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து, தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும். ஏனெனில் தம் உயிரைக் காத்துக்கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்துவிடுவர். மாறாக, என் பொருட்டுத் தம்மையே அழித்துக் கொள்கிற எவரும் வாழ்வடைவார். மனிதர் உலகம் முழுவதையும் ஆதாயமாக்கிக்கொண்டாலும் தம் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன? அவர் தம் வாழ்வுக்கு ஈடாக எதைக் கொடுப்பார்? (மத் 16:24-26)




**வத்திக்கான்:** “புகழனைத்தும் உமதே!’ என்ற பெயர் கொண்ட Laudato si' திருமடலின் தொடர்ச்சியை இன்றைய காலநிலை மாற்ற நெருக்கடிகளுடன் தொடர்புபடுத்தி திருத்தந்தை எழுதி வருவதாக அறிவிக்கப் பட்டுள்ளது.




Laudato si' திருமடலின் இரண்டாவது பகுதியை, அதாவது அதன் தொடர்ச்சியை தான் எழுதிவருவதாக, ஆகஸ்ட் 21, திங்களன்று ஐரோப்பிய வழக்குரைஞர்கள் குழுவை திருப்பீடத்தில் சந்தித்தபோது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியது பற்றி விளக்கமளித்த திருப்பீடச்செய்தி தொடர்பாளர் மத்தேயு புரூனி அவர்கள், திருத்தந்தையின் இந்த புதிய பகுதி, இன்றைய காலநிலை நெருக்கடிகளுக்கு பதிலளிக்கும் விதமாக இருக்கும் என எடுத்துரைத்தார்.

ஐந்து கண்டங்களின் மக்களை பாதித்து வரும் அண்மைக்கால தீவிர காலநிலை மாற்ற நிகழ்வுகள், பெரும் இயற்கை பேரழிவுகள் போன்றவற்றை மையப்படுத்தி திருத்தந்தை பதிந்துவரும் கருத்துக்களை உள்ளடக்கியதாக Laudato si' ஏட்டின் புதிய பதிப்பு இருக்கும் என உரைத்தார் புரூனி.

நம் பொது இல்லமாகிய படைப்பை பாதுகாக்க சுற்றுச்சூழலை மதிப்பதன் அவசியத்தை வலியுறுத்தும் Laudato si' ஏடு திருத்தந்தை தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டபின் வெளியிட்ட இரண்டாவது ஏடாகும்.
2015ஆம் ஆண்டு மே மாதம் 24ஆம் தேதி எழுதி முடித்து கையெழுத்திட்டு, அதே ஆண்டு ஜூன் மாதம் 18ஆம் தேதி இவ்வேட்டை வெளியிட்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

அதற்கு முன்னர் திருஅவையின் தலைமைப் பொறுப்பையேற்ற 2013ஆம் ஆண்டிலேயே, ஜூன் மாதம் 29ஆம் தேதி Lumen fidei என்ற ஏட்டை வெளியிட்டிருந்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

அசிசியின் புனித பிரான்சிஸ் அவர்களின் படைப்பின் பாடல் என்பதில், இறைவா உமக்கே புகழ் என அவர் எழுதியுள்ள Laudato si’ என்ற வரிகளை தன் தலைப்பாகக் கொண்டதாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின், நம் பொது இல்லமாகிய இவ்வுலகை காப்பாற்றும் கடமையை வலியுறுத்தும் Laudato si' ஏடு வெளியிடப்பட்டது. இதன் தொடர்ச்சி, அதாவது திருத்தந்தையின் அண்மை கருத்துக்களை உள்ளடக்கிய புதிய பதிப்பு விரைவில் வெளியிடப்படவுள்ளது.

நாம் நமக்குப் பின்வரும் தலைமுறையினருக்கும் வளரந்து வரும் நம் குழந்தைக் களுக்கும் எப்படிப்பட்ட உலகை விட்டுச் செல்லப்போகிறோம்? இந்தக்கேள்வி மற்றும் இதுபோன்ற பல கேள்விகளுக்கு பதில் தேடத் தூண்டுகிறது இந்த ‘ புகழ் அனைத்தும் உமதே! என்ற Laudato Si” எனும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் சுற்றுச் சூழல் பற்றிய சுற்று மடல்.

அடுத்து வெளிவந்துள்ள இதன் புதிய சேர்க்கையை வாசித்தறிய முற்படுவோம். திருஅவையின் இந்த வெளியீடு நமது இந்த பூமியை அதன் அழிவிலிருந்து காக்க எடுக்கப்படும் பெரும் முயற்சியாகும்.

# சகோ. ஜோர்ஜ் வைத்தியநாதன் திருத்தொண்டராக அருள்பொழிவு பெற்றார்

கம்பார், பேராக்: கடந்த ஆகஸ்டு 17-ம் திகதி, கம்பாரில் உள்ள திருஇருதய ஆண்டவர் ஆலயத்தில் குருத்துவ மாணவர் சகோ. ஜோர்ஜ் வைத்தியநாதன் அவர்கள் திருத்தொண்டராக அருள்பொழிவு செய்யப் பட்டார்.

ஏறக்குறைய 600 பங்கு மக்களும் 27 பினாங்கு மற்றும் இதர மறைமாவட்டங் களிலிருந்தும் வருகை தந்த அருள்பணி யாளர்கள் மத்தியில் கர்தினலாகத் தேர்வுப் பெற்றுள்ள (ஆயர்) செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்களால் திருத்தொண்டராக அருள்பொழிவு செய்யப்பட்டார். அவரோடு இணைந்து, கோலாலம்பூர் மாமறை மாவட்டத்தைச் சேர்ந்த Msgr ஜேம்ஸ் ஞானபிரகாசம் அவர்களும், பினாங்கு மறைமாவட்டத்தைச் சேர்ந்த Msgr ஹென்றி ராஜூ மற்றும் Msgr ஜூட் மிராண்டா ஆகியோர் திருப்பலி கொண் டாடினர்.

கர்தினலாகத் தேர்வுப் பெற்றுள்ள (ஆயர்) செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்கள், புதிய திருத்தொண்டரை “நீங்கள் கடவுளுடைய வார்த்தையைக் கேட்பது மட்டுமல்லாமல், அதை மற்றவர்களுக்கும் பரப்புங்கள். நற்செய்திக்கு வாக்குறுதி அளித்த நம்பிக்கையை ஒருபோதும் கைவிடாதீர்கள். உண்மையுள்ள இதயத்துடன் நம்பிக்கை யின்மறைபொருளைப் பற்றிக்கொள்ளுங் கள். உன் வாய் சொல்வதை செய். தூய ஆவியால் உயிர்ப்பிக்கப்பட்ட கிறிஸ்துவைப் பின்பற்றும் ஒவ்வொருவரும் கடவுளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையான காணிக்கையாக இருப்பார்கள். எனவே நீங்கள் இறுதிநாளில் கடவுளைச் சந்திக்கும் போது, "அருமை, உண்மையுள்ள ஊழி யரே, உங்கள் ஆண்டவருடன் மகிழ்ச்சி யாக இருங்கள்" என்று அவர் சொல்வதை நீங்கள் கேட்பீர்கள் என்று திருத்தொண் டரை ஊக்குவித்தார்,


*கர்தினலாகத் தேர்வுப் பெற்ற செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்களுடன் அருள்பணியாளர்களும் திருத்தொண்டரும்*

புதிதாக அருள்பொழிவுப் பெற்ற திருத்தொண்டர் ஜோர்ஜ் அவர்கள் தனது பன்மொழி நன்றியுரையில், "அன்பில் லாதோர் கடவுளை அறிந்து கொள்ள வில்லை; ஏனெனில், கடவுள் அன்பாய் இருக்கிறார்." என்ற கூற்றோடு நன்றியு ரையைத் தொடங்கினார். இதனிமித்தம், அவர் "கடவுள் அன்பாய் இருக்கிறார்." (1 யோவான் 4:8) என்ற கருப்பொருளைத் தேர்ந்தெடுத்தாகத் தெரிவித்தார். மேலும் அது இயேசுவின் சகோதரத்துவ நம்பிக்கை மற்றும் அன்பைப் பற்றி எடுத்துரைக்கிறது என்றார்.

(தொடர்ச்சி அடுத்தப் பக்கம்..)

# சகோ. ஜோர்ஜ் வைத்தியநாதன் திருத்தொண்டராக அருள்பொழிவு பெற்றார்

*முதல் பக்கத் தொடர்ச்சி*

தொடர்ந்து, "இன்று மாலை, கிறிஸ்துவின் குருத்துவத்தில் பணிபுரியும் கொடையை எனக்கு வழங்க கடவுள் என்னை தேர்ந்தெடுத்துள்ளார். இது அன்பு செய்வதற்கும், சேவை செய்வதற்கும், குணப்படுத்துவதற்குமான ஓர் அழைப்பு" என்று திருத்தொண்டர் கூறினார். அவர் தனது குடும்பத்தினர், அவருக்குக் கற்பித்தவர்கள், மேய்ப்புப்பணியின போது






அவர் ஈடுபட்ட பணிக்குழுக்கள் மற்றும் அனைவரது ஆழமான ஆதரவிற்கும், இந்த ஆண்டு முழுவதும் இறைவேண்டல் செய்ததற்கும் அவர் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார். நிறைவாக, திரு இருதய ஆண்டவர் பங்கின் பங்குத்தந்தை அருட்பணி சைமன் ஆனந்த் மற்றும் அதன் திருவழிபாட்டு பணிக்குழு, அயரா உழைத்த அனைத்து பணிக்குழுக் களுக்கும், பங்கு மக்களுக்கும் தனது நன்றியைத் தெரிவித்தார்.

அடுத்து வரும் சில காலத்திற்கு திருத் தொண்டர் ஜோர்ஜ் வைத்தியநாதன் அவர்கள் ஈப்போவில் உள்ள புனித லூர்து அன்னை பங்கில் பணிபுரிவார் என கார்தினலாகத் தேர்வப்பெற்றுள்ள செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்கள் அறிவிப்புச் செய்தார்.

-தமிழாக்கம் : ஆர்.கே.

# 2024-ம் ஆண்டு உலக அமைதி தினத்திற்கான தலைப்பு வெளியிடப்பட்டது

**வத்திக்கான்:** 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதி திருஅவையில் சிறப்பிக்கப்பட உள்ள உலக அமைதி தினத்திற்கான கருப்பொருளை, அதாவது, தலைப்பை வெளியிட்டுள்ளது திருப்பீடம்.

‘செயற்கை நுண்ணறிவும் அமைதியும்’ என்பதே 2024ஆம் ஆண்டு உலக அமைதி

## செயற்கை நுண்ணறிவும் அமைதியும்’ 2024ஆம் ஆண்டு உலக அமைதி தினத்திற்கான தலைப்பு

தினத்திற்கான தலைப்பு என ஒருங் கிணைந்த மனிதகுல வளர்ச்சிக்கான திருப்பீடத்துறையால் ஆகஸ்ட் 9ஆம் தேதி செவ்வாய்க்கிழமையன்று வெளியிடப்பட்ட அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செயற்கை நுண்ணறிவுத் துறையில் மனித குலம் கண்டுவரும் குறிப்பிடத்தக்க வளர்ச்சி, மனித செயல்பாடுகளிலும், தனிப்பட்ட மற்றும் சமூக வாழ்விலும், அரசியலிலும், பொருளாதரத்திலும் அதன் பாதிப்பை அதிவேகமாக அதிகரித்து வருகிறது எனக் கூறும் திருப்பீடத்துறையின் செய்தி, புதிய தொழில்நுட்பங்களை



வரவேற்கும் அதேவேளை, அழிவைத் தரும் பாதிப்புகள் மற்றும் சுற்றுச்சூழல் அழிவு ஆகியவைகள் குறித்தும் நாம் ஆழமாக சிந்திக்க வேண்டும் என்ற திருத்தந்தையின் அழைப்பையும் அதில் சுட்டிக்காட் டியுள்ளது.

மோதலுக்கு வழிவகுக்கும் அநீதிகளும் சரிநிகரற்றத் தன்மைகளும் உருவாவதற்கு புதிய கண்டுபிடிப்புகள் காரணமாக அமையக்கூடாது எனவும், மனிதகுலத்திற்கு சேவையாற்றுவதாக, நம் பொது இல்லமாகிய இவ்வுலகை காப்பாற்றுவதாக, ஒழுக்கரீதி மனநிலையைக் கொண்டதாக, எந்த ஓர் அறிவியல் புதிய கண்டுபிடிப்பும் இருக்க வேண்டும் எனவும் ஒருங்கிணைந்த மனிதகுல வளர்ச்சிக்கான திருப்பீடத்துறை அழைப்பு விடுத்துள்ளது.

*கிறிஸ்டோபர் பிரான்சிஸ் – வத்திக்கான்*

# செமினி, புனித அன்னம்மாள் சிற்றாலய திருவிழா கொண்டாட்டம்

**காஜாங்:** கடந்த ஆகஸ்டு மாதம் 20-ம் திகதி, செமினி, பண்டார் ரிஞ்சிங்கில் உள்ள புனித அன்னம்மாள் சிற்றாலயத்தில் ஆண்டு திருவிழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. வெள்ளிக்கிழமை 18 ஆம் திகதி தொடங்கி ஞாயிற்றுக்கிமை 20-ம் திகதி வரை மூன்று நாள் விழாவாக **‘கிறிஸ்துவும் பணியும்’** என்ற பொது கருபொருளில், வெள்ளிக்கிழமை ‘கிறிஸ்துவில் கொண்ட நம்பிக்கையில் வேரூன்றியிருத்தல்’, சனிக்கிழமை ‘கிறிஸ்துவில் கொண்ட எதிர்நோக்கில் வாழ்தல்’ மற்றும் ஞாயிறன்று ‘கிறிஸ்துவில் கொண்ட அன்பை ஆழப்படுத்துதல்’ ஆகிய மூன்று துணை கருப்பொருள்களில் திருப்பலிகள் கொண்டாடப்பட்டன.

காஜாங், புனித திருக்குடும்பப் பங்கின் பராமரிப்பில் இருந்துவரும் இச்சிற்றாலயத்தின் திருவிழா திருப்பலியானது, ஞாயிறன்று காலை 10.00 மணிக்கு புனித அன்னம்மாள் நவநாள் இறைவேண்டலோடு, அருட்பணி ஜோர்ஜ் ஹெரிசன் அவர்களின் தலைமையில், அருட்பணி ஜோன் ஆனந்தன் மற்றும் அருட்பணி பொனவென்சர் இராயப்பன் ஆகியோர் இணைந்து கொண் டாடினர்.

விழா அன்று திரண்டிருந்த ஏறக்குறைய 700 பேர் அமர கூடாரங்கள் அமைக்கப்பட்டன.

விழாவின் இறுதியில் வழக்கம்போல் மதிய உணவு அனைவருக்கும் பராமரிப்பட்டது. நிறைவாக, இச்சிற்றாலயத்தின் தலைவர் ஜோன்சன் ஆரோக்கியசாமி அவர்கள் அருட்பணியாளர்களுக்கும், பணிக்குழு வினருக்கும் இறைமக்களுக்கும் நின்றி நவில்ந்தார்.

*-லூசியா அலெக்சன், பண்டார் ரிஞ்சிங்.*



# துன்புறும் ஊழியரை துன்பத்தில் காண்போம்!

இன்று பொதுக்காலத்தின் 22ம் ஞாயிறு. தொடர்ந்தாற்போல் வெற்றி காண்பதோ, சமூக அந்தஸ்தில் உயர் நிலையில் இருப்பதோ, கிறிஸ்துவ வாழ்வு அல்ல என்பதை வாசகங்கள் அறிவுறுத்துகின்றன. அப்படியே எல்லாம் வெற்றிமுகமாகவே இருந்தாலும் அதுவே வாழ்க்கையாக அமைந்து விடாது. ஓரளவு தூரம்தான் அது நம்மை அழைத்துச் செல்லும். சில வேளையில் ஏன் பல வேளையில் தோல்விமுகத்தையும் நாம் சந்திக்க நேரிடும். இதுவே வாழ்க்கையின் இயல்பு.

வாழ்க்கையில் தொடர்ந்து வெற்றிமுகமாவே இருந்து விட்டால், பணிவுக்கும் தாழ்ச்சிக்கும், கரிசனைக்கும் இடமில்லாமல் போய்விடும். கர்வமும் ஆணவமும் அரியணை ஏறிவிடும். வெற்றியை விட, தோல்வியே வாழ்க்கைக்குச் சிறந்த ஆசான். புனித பிரான்சிஸ் அசிசியாரும் தென்னாப்பிரிக்க முன்னாள் அதிபர் நெல்சன் மண்டெலாவும் இதற்கு நல்லச் சாட்சிகள். 13ம் நூற்றாண்டில் இத்தாலிக்கும் பிரான்ஸ்க்கும் இடையிலான போரின் போது இத்தாலி தோல்வி கண்டதால் பிரான்சிஸ் அசிசியார் ஓராண்டு சிறைவாசம் கண்டார். சிறைச்சாலை, பிரான்சிஸ் அசிசியாரை சிறந்த புனிதாக உருமாற்றியது. கடந்த நூற்றாண்டில், தேசத்துரோகக் குற்றத்திற்காக 27 ஆண்டு சிறைத்தண்டனைக்கு ஆளானார் நெல்சன் மண்டெலா. சிறைவாசம் அவரை பரிவும் பாசமுமிக்க மனிதராகவும் தலைவராகவும் மாற்றியது.

முதல் வாசகத்தில். கிமு 5ம் நூற்றாண்டில் யூத நாட்டிற்குப் பெரும் ஆபத்து அல்லது தோல்வி வரப்போகிறது என இறைவாக்கினர் எரேமியா (20:7-9) எச்சரிக்கிறார். அவரது பேச்சைக் கேட்பார் யாருமில்லை எனப் புலம்புகிறார். பாபிலோனிய மன்னன் நெபுகத்னேசரின் படையெடுப்புப் பற்றி எரேமியா முன்னுரைக்கிறார்.

கடந்த வார நற்செய்தியில் இயேவை புகழ்ந்தார். இன்று, புகழின் உச்சியில் மிதந்து கொண்டிருந்த பேதுருவை, “என் கண்முன் நில்லாதே சாத்தானே” (16:23) என இயேசு வசைப்பாடுகிறார். மெசியாவாக இயேசு துன்பப்பட்டு கொலை செய்யப்படவிருப்பதை பேதுருவால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அது இறைத்திட்டம் என்பதை அவரால் நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை. மெசியா என்பவருக்கு தோல்வி இல்லை, பாடுகளும் சிலுவையும் இல்லை; மாட்சியே என்றென்றும் உள்ளது என்பது பேதுருவின் எதிர்பார்ப்பு. “சாத்தானை” இங்கு ஏன் கொண்டு வர வேண்டும்?. இயேசு பாலைநிலத்தில் சோதனைக்கு ஆளாக்கப்பட்ட போது தன் வழிக்கு இயேசுவைத் திசை திருப்ப சாத்தான் முயன்றது. பேதுருவின் உருவில் அதே சாத்தான் மீண்டும் வந்து, இயேசுவைத் திசை திருப்ப பார்க்கின்றது.

பேதுருவைக் குற்றம் சொல்ல முடியாது. அவரும் நம்மை போன்றவர். எளிதான வழி இருக்க, துன்பமும் வேதனையும் தரும் வழியை விரும்புவானே? இது மனித சிந்தனையின் ஓட்டம். விண்ணகத் தந்தையின் வெளிப்பாடாக இருந்த பேதுருவின் சிந்தனை, ஒரு கனம் மாறியது. வாழ்க்கையில் தப்பான செயல்கள் நிகழும் போது அவற்றுக்கு நாமே காரணம். இரண்டாம் வாசகத்தில் (உரோ.12:1-2) கூறுவது போல, இந்த உலகத்தின் போக்கின்படி ஒழுகாமல் இருக்க, நல்லதொரு பாடத்தைக் கற்றுக்கொண்ட பேதுரு, கிறிஸ்துவைப் பின்பற்றி திருஅவையின் பாறையாக செயல்பட்டு, தியாகச் செம்மலாக விளங்கினார். அவரின் தலைமையில் நிறுவப்பட்ட திருஅவை இன்றளவும் சாத்தானின் சேட்டைகளை எதிர்கொண்டு போராடி முன்னேறி வருகிறது. இயேசு கிறிஸ்து துன்புறும் ஊழியன், பரிவுமிக்க மெசியா என்பதே உண்மை. கிறிஸ்துவின் எடுத்துக்காட்டைப் பின்பற்றி வாழும் வரத்தைக் கேட்போம்.

-அந்தோணி இன்னாசி, ஸ்ரீ கெம்பாங்யான்,
சிலாங்கூர்

**ஆண்டின் பொதுக்காலம் 22ம்- ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | எரே 20: 7-9 |
| திபா | 63: 1. 2-3. 4-5. 7-8 ம் |
| வாசகம் | உரோ 12: 1-2 |
| நற்செய்தி | 16: 21-27 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை- வாரம் 1**